**// மிக மிக அவசரம் //** **// தனி கவனம் //**

**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

**ந.க.எண். 2072 /அ1/அ5/2025, நாள். .05.2025.**

---

**பொருள் :** தமிழ்நாடு அமைச்சுப்பணி – 30.06.2025 நிலவரப்படி மூன்று வருடத்திற்கு மேல் ஒரே பள்ளியில் / பணியிடத்தில் பணிபுரிந்து வரும் உதவியாளர் / இளநிலை உதவியாளர் – ஆய்வக உதவியாளர் / பதிவுரு எழுத்தர் / பதிவுரு உதவியாளர் – விபரம் – தொடர்பாக.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண்.149, பள்ளிக் கல்வி (ப.க.1(1) துறை, நாள்.01.07.2024.
2. சென்னை –6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள் ந.க.எண்.027227/அ4/இ1/2025, நாள்.08.05.2025.

-----

அரசாணை (நிலை) எண்.149, பள்ளிக் கல்வி (ப.க.1(1), துறை நாள்.01.07.2024 பத்தி 5(2) ல் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

a) During the "transfer period" staff who have already completed a service of 3 years or who would be completing a service of 3 years as on the 30th of June next, shall be subjected to transfer to another office, as the case may be, subject to the condition that the transfer is made to a vacant post or the post is also due for transfer under these orders. No staff shall be allowed to continue in one office for more than 3 years.

b) The above 3 years norms is squarely applicable to all categories of staff (P.A to DEO, Superintendent to Junior Assistant /Typist cadre, Lab Assistant and Record Clerk) in the Directorate of School Education, Teachers Recruitment Board, State Project directorate, other directorate, CEO, DEO, BEO offices and Schools.

மேற்காண் பொருள் சார்பாக பார்வை –1 ல் கண்ட அரசாணையில் தெரிவித்துள்ளவாறு பள்ளிக் கல்வித் துறையில் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பதவியில் 30.06.2025 நிலவரப்படி ஒரே பணியிடத்தில் மூன்றாண்டுகள் பணிக்காலம் நிறைவடைய உள்ள பணியாளர்களின் விவரங்களை கீழ்க்குறிப்பிட்டுள்ள படிவத்தில் பூர்த்தி செய்து (Excel மற்றும் Signed Copy ) பார்வை – 2 ல் கண்ட செயல்முறை கடிதத்தில் அனுப்ப கோரப்பட்டுள்ளது.

எனவே, 30.06.2025 நிலவரப்படி ஒரே பள்ளியில் ஒரே பணியிடத்தில் மூன்றாண்டுகள் பணிக்காலம் நிறைவடைய உள்ள பணியாளர்களின் விவரங்களை இணைக்கப்பட்டுள்ள கூகுள் படிவத்தில் (GooGle Sheet) 09.05.2025 இன்று பிற்பகல் 2.00 மணிக்குள் உள்ளீடு செய்து அதன் அசல் பிரதியை இவ்வலுவலகத்திற்கு நேரில் ஒப்படைக்க அனைத்து வகை அரசு/ நகரவை உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கலாகிறது.

மேற்காண் விவரங்களில் 30.06.2025 நிலவரப்படி ஒரே பணியிடத்தில் மூன்றாண்டுகள் பணிபுரியும் பணியாளர்களின் விவரம் அனைத்தும் விடுபாடல் முழுமையாக அனுப்பிட வேண்டும் என்றும் அவ்வாறு பணியாளர்கள் பெயர்கள் ஏதேனும் விடுப்பட்டது பின் நாட்களில் கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட தலைமை ஆசிரியர் / பணியாளர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என திட்டவட்டமாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மேற்காண் பொருள் சார்பாக 30.06.2025 நிலவரப்படி ஒரே பள்ளியில் மூன்றாண்டுக்கு மேல் பணிபுரியவில்லை எனில் இன்மை அறிக்கை தவறாமல் அனுப்புதல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**இணைப்பு :**

உரிய படிவங்கள் – 2A, 2B, 3A, 3B மற்றும் 3C. (கூகுள் படிவம்)

**// ஒப்பம் //**

**முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),**

**வேலூர்.**

**பெறுநர் :**

அனைத்து அரசு உயர்/ மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள்.

**நகல் :**

கோப்பிற்கு.

(பா.க)